DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 730 / 2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW -3

LW - 5

Name : இருதாலைய மருதப்ப பாண்டி

Father`s Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

Date : 09.06.**2026**

1. **( A1- A3 died. A4 present)**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் தற்போது பணி ஓய்வு பெற்று, சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் கடந்த 2009 – 2012 மார்ச் வரை சங்கரன்கோவில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது 20.12.2010ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் சங்கரன்கோவில் நகர காவல் ஆய்வாளர் என்னையும், எனது உதவியாளர் கணேசன் அவர்களையும் அழைத்தன் பேரில் நகர் காவல் நிலையம் சென்றபோது அங்கு 4 நபர்கள் இருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது 4 நபர்களும் வாக்மூலம் கொடுத்தார்கள். அந்த 4 நபர்களும் யார் என்று தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. அந்த 4 நபர்களும் கள்ள நோட்டினை ஜெராக்ஸ் எடுத்து புழக்கத்தில் விட்டதாக சொன்னார்கள். வழக்கு

சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையின் கடந்த 20.12.2010ம்தேதியன்று இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். இந்த வழக்கின் எதிரிகள் ராஜேந்திரன், இராமநாதன் ஆகியோர்கள் இந்த வழக்கு சம்மந்தமாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். ராஜேந்திரன் என்பவர் வாழ்க்கை நடத்துவதற்கு பணம் கஷ்டமாக இருப்பதால் சிவகாசி பகுதியில் கம்யூட்டர் மிஷின் வைத்து போலி பணம் தயாரிக்கலாம் என்று ஆய்வாளர் விசாரிக்கும்போது சொல்லியுள்ளார்கள். அப்போது நானும், மிஷின் வைத்து பணம் அச்சடிக்கலாம் என்று என் முன்பாக ஆய்வாளர் விசாரித்த போது சொல்லியுள்ளார்கள் என்றால் சொல்லியுள்ளார்கள். எதிரி சிவகாசிக்கு சென்று பழைய கம்யூட்டர் மிஷின் வாங்கி பணம் அச்சடிக்கலாம் என்று நினைத்து மிஷின் வாங்கி வீட்டில் வைத்து பணம் அச்சடித்தாக என் முன்னிலையில் ஆய்வாளரிடம் எதிரி கூறினாரா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி மிஷின் வைத்து பணம் அச்சடித்து ரூ. 500, ரூ. 100 அச்சடித்து ஜெராக்ஸ் எடுத்து அதை மாரியப்பன் மூலம் புழக்கத்தில் விட்டார் என்று சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து எதிரி என் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதை என் முன்பும், என் உதவியாளர் கணேசன் முன்பும் பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>**இல்லை

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.